Dinamani - 18/08/2023

# வெளிநாட்டு பல்கலைக்கழக பட்டங்களுக்கு அங்கீகாரம்: வரைவு வழிகாட்டுதலை வெளியிட்ட யுஜிசி

**புது தில்லி, ஆக.17:** வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்படும் பட்டச் சான்றிதழ்களுக்கு அங்கீகாரம் மற்றும் பட்ட சமநிலை (ஈக்வலன்ஸ்) தகுதிச்சான்று வழங்குவதற்கான வரைவு வழிகாட்டுதலை பல்கலைக்கழக மானியக் குழு (யுஜிசி) வெளியிட்டுள்ளது.

இதில், நேரடி சேர்க்கை முறையில் பெறப்பட்ட பட்டப் படிப்புகளுக்கு மட்டுமே அங்கீகாரம் அளிக்கப்படும் எனவும், வெளிநாட்டு பல்கலைக்கழகங்களிலிருந்து தொலைநிலை அல்லது இணைய வழியில் மேற்கொள்ளப்படும் பட்டப் படிப்புகள் மற்றும் அவற்றின் கிளைக் கல்வி மையங்கள் சார்பில் வழங்கப்படும் பட்டப் படிப்புகளுக்கும் அங்கீகாரம் அளிக்கப்படாது என்பதையும் யுஜிசி தெளிவுபடுத்தியுள்ளது.

வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இந்தியாவில் செயல்பட்டு வரும் உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து இந்தியாவில் அதன் வளாகங்களை தொடங்க மத்திய அரசு அனுமதித்து, விரைவில் அவை கல்வித் திட்டங்களைத் தொடங்க உள்ள நிலையில் 'வெளிநாட்டு கல்வி நிறுவனங்களிலிருந்து பெறப்படும் பட்ட தகுதிகளுக்கான சமநிலை தகுதிச்சான்று வழிகாட்டுதல்கள் 2023' என்ற இந்த வழிகாட்டுதலை யுஜிசி வெளியிட்டுள்ளது.

வழிகாட்டுதலில் கூறியிருப்பதென்ன? வெளிநாட்டு பல்கலைக்கழகங்களால் வழக்கப்படும் படிப்புகள் அந்த நாடுகளில் உரிய அங்கீகாரம் பெற்ற படிப்புகளாக இருக்க வேண்டும்.

இந்திய மாணவர்கள் இந்தப் படிப்புகளில் நேரடி முறையில் சேர்க்கை பெற்று மட்டுமே படிப்பை மேற்கொள்ள வேண்டும்.

இணைய வழியிலோ, தொலைதூர முறையிலோ அல்லது கிளைக் கல்வி மையங்கள் மூலமாகவோ படிப்பை மேற்கொள்ளக் கூடாது.

பட்டப் படிப்புக்கான கால அளவு, இந்தியாவில் வழங்கப்படும் அதே மாதிரியான பட்டப் படிப்பு 'கால அளவுக்கு இணையாக இருக்க வேண்டும்.

இந்தக் கால அளவு மாறுபடும் நிலையில், இரு உயர்கல்வி நிறுவனங்களிலும் அந்த பட்டப் படிப்புக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண் புள்ளிகளை கருத்தில்கொண்டு பட்ட சமநிலை தகுதிச்சான்றை யுஜிசி வழங்கும். அதாவது, ஒரு வாரத்துக்கு எத்தனை மணி நேரம் பாடம் நடத்தப்படுகிறது, மாணவர் சுய கற்றலுக்கான நேரம், செய்முறை கற்றல் கால அளவு ஆகியவை கருத்தில் கொள்ளப்படும்.

இதில் இரு (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உயர்கல்வி நிறுவனங்களிடையே) கல்வி நிறுவனங்களிடையே அதிகபட்சமாக 10 சதவீத மாறுபாடு மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

அதற்குமேல் வேறுபாடு இருக்கும் நிலையில், பட்ட சமநிலை தகுதிச் சான்று அளிக்கப்படமாட்டாது.

மாணவர்கள் எளிதாக இந்த பட்ட சமநிலை தகுதிச் சான்றை பெறும் வகையில், இணையவழி விண்ணப்ப நடைமுறை அமல்படுத்தப்படும். இவ்வாறு வழங்கப்படும் சமநிலை தகுதிச் சான்று, இந்தியாவிலுள்ள உயர்கல்வி நிறுவனங்களில் பட்ட மேற்படிப்புகளை மேற்கொள்ளவும் வேலைவாய்ப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படும் என்று யுஜிசி தெரிவித்துள்ளது.